**செய்தி வெளியீடு எண்: 706** **நாள்:20.10.2019**

**டாக்டர் எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்**
**நிகர் நிலை பல்கலைக்கழகத்தின் 28–வது பட்டமளிப்பு விழாவில்**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள்**
**ஆற்றிய விழாப் பேருரை – 20.10.2019**

**இதயதெய்வம் பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களையும், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தையும் வணங்கி,**

எளிய குடும்பத்தில் பிறந்து, தனது கடின உழைப்பு மற்றும் அயராத முயற்சியின் மூலம் பல கல்வி நிலையங்களை நிறுவி, ஒரு சிறந்த கல்வியாளராக திகழ்ந்து வரும் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய திரு.ஏ.சி.சண்முகம் அவர்களால் நிறுவப்பட்ட டாக்டர் எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் நிகர் நிலைப் பல்கலைக்கழகத்தின் 28வது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த விழா சீரும், சிறப்போடும் நடைபெற்றுக் கொண்டிருப்பதற்கு தலைமை தாங்கிக் கொண்டிருக்கின்ற டாக்டர் எம்.ஜி.ஆர்.கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் நிறுவனர் – வேந்தர் மரியாதைக்குரிய திரு.ஏ.சி.சண்முகம் அவர்களே!

டாக்டர் எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் நிறுவனர் – தலைவர்
மரியாதைக்குரிய திரு.ஏ.சி.எஸ்.அருண்குமார் அவர்களே!

இந்த நிகழ்ச்சியில் பங்கு பெற்றிருக்கின்ற

மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்

திரு.கே.ஏ.செங்கோட்டையன் அவர்களே!

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களே!

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர்
திரு.கே.பி.அன்பழகன் அவர்களே,
மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர்
திரு.பா.பெஞ்சமின் அவர்களே!

மாண்புமிகு தமிழ்வளர்ச்சித் துறை அமைச்சர்
திரு.க. பாண்டியராஜன் அவர்களே!

மற்றும் நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மக்களவை முன்னாள் சபாநாயகர்
திரு.மு.தம்பித்துரை அவர்களே!

அரசு கொறடா மதிப்பிற்குரிய திரு.ராஜேந்திரன் அவர்களே!

மாண்புமிகு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

முன்னாள் அமைச்சர் பெருமக்களே!

முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

கௌரவ முனைவர் பட்டம் பெற்றுள்ள
DRDOவின் செயலர்
டாக்டர் ஜி.சதீஷ் ரெட்டி அவர்களே!
கங்கா மருத்துவமனையின் தலைவர் மற்றும் இயக்குநர்
டாக்டர் எஸ். ராஜா சபாபதி அவர்களே!
இசையமைப்பாளர் மரியாதைக்குரிய திரு.ஹாரீஸ் ஜெயராஜ் அவர்களே!
பரதநாட்டிய கலைஞர் மரியாதைக்குரிய செல்வி. ஷோபனா சந்திரகுமார் அவர்களே!
பல்கலைக்கழக பேராசிரியர் மற்றும் ஆசிரிய பெருமக்களே!
இன்று பட்டம் பெற்றுள்ள நாளைய சாதனையாளர்களே! மாணவ, மாணவிகளே!
பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!
பெற்றோர்களே! பெரியோர்களே! தாய்மார்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது நன்றிகலந்த வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்லூரி படிப்பு முடிந்தவுடன், மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களிடம் உள்ள ஈடுபாட்டால் அவருடன் தன்னை இணைத்துக் கொண்டு அரசியல் பொது வாழ்வை திரு ஏ.சி.எஸ். தொடங்கினார். டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் அன்பை பெற்ற மரியாதைக்குரிய திரு.ஏ.சி.எஸ். அவர்கள், 1980 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராகவும், 1984 ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, சமுதாய வளர்ச்சிக்காகவும், தொகுதி மக்கள் மேம்பாட்டிற்காகவும் பல திட்டங்களை செயல்படுத்தியவர்.

நாட்டின் வளர்ச்சிக்கும், வருங்கால சமுதாய மேம்பாட்டிற்கும் கல்வியே அடிப்படை என உணர்ந்த திரு.ஏ.சி.எஸ் அவர்கள், 1983 ஆம் ஆண்டு முதன் முதலாக சென்னையில் பாலிடெக்னிக் கல்லூரி ஒன்றைத் தொடங்கினார். இதனை தொடர்ந்து, சென்னை, ஆரணி மற்றும் பெங்களூர் ஆகிய நகரங்களில் பல கல்வி நிறுவனங்களை உருவாக்கினார். இக்கல்வி நிறுவனங்களை ஒருங்கிணைத்து, தான் உருவாக்கிய இந்த நிகர்நிலை பல்கலைக்கழகத்திற்கு, தன்னை வளர்த்து ஆளாக்கிய பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு நன்றி செலுத்தும் வகையில், **டாக்டர் எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்** என்ற பெயரை சூட்டி பெருமை சேர்த்தார்.

**இங்கு பயிலும் மாணவர்கள் வேலை தேடுபவர்களாக இல்லாமல் பலருக்கு வேலை அளிப்பவர்களாக உருவாக வேண்டும்** என்ற இந்த நிறுவனத்தின் நோக்கம் பாராட்டிற்குரியது.

மன உறுதி, சிறப்பான கல்வியாற்றல் மற்றும் பிறருக்கு தொண்டு செய்யும் மனப்பான்மை ஆகிய உயர்ந்த எண்ணங்களுடன் நீங்கள் உங்கள்

கல்லூரி வாழ்வினை துவக்கினீர்கள். கல்லூரியில் படிக்கும் காலங்களில் அந்த எண்ணங்கள் பூரணத்துவம் அடைந்து, அவற்றை நிறைவேற்ற, இன்று பட்டம் பெற்று, கல்லூரியிலிருந்து பொறுப்புள்ள இளைஞர்களாக வெளி வரும் உங்களுக்கு எனது பாராட்டுதல்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று என்னுடன் கௌரவ முனைவர் பட்டம் பெற்றுள்ள அனைவருக்கும் எனது பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் இந்நிகழ்ச்சியின் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பட்டமளிப்பு விழா என்ற இந்த அருமையான நிகழ்வில் பங்கேற்பது தனிச்சிறப்பாகும். உங்களுக்காகக் காத்திருக்கும் பெருமை வாய்ந்த பொறுப்புக்களை நீங்கள் ஏற்றுக் கொள்ளும் தருணம் இதுவாகும். மனித சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கான உங்களது பொறுப்புக்களை நிறைவேற்ற உறுதி எடுத்துக்கொள்ளும் தருணமும் இதுதான். நானும் இன்று கௌரவ முனைவர் பட்டம் பெற்றதின் மூலம், எனது பொறுப்புகளும் அதிகரித்துள்ளன.

**போற்ற வேண்டியவை "உண்மை, உழைப்பு, உயர்வு;" பின்பற்ற வேண்டியவை "கனிவு, பணிவு, துணிவு"; பேண வேண்டியவை "கடமை, கண்ணியம், கட்டுப்பாடு;" என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.**

பேரறிஞர் அண்ணா அவர்களின் இந்த அறிவுரையை சமூகப் பணி ஆற்றச் செல்லும் நீங்கள் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும் என்று உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு**
**மாடல்ல மற்றை யவை".**

**ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியாகும். மற்ற செல்வங்கள் எல்லாம் அத்தனை சிறந்தவை அல்ல என்றார் தெய்வப் புலவர் வள்ளுவர் பெருந்தகை.**

**"தரமான கல்வி நிறுவனங்கள் மூலம் மனித வள மேம்பாட்டை ஊக்குவித்து, உயர்தரம் வாய்ந்த கல்வியாளர்களைக் அதிக எண்ணிக்கையில்**

**உருவாக்குவதும், பல்கலைக்கழகக் கல்வியில் தமிழ்நாட்டை ஒரு பன்னாட்டு மையாக உருவாக்குவதுமே எனது அரசின் லட்சியம்'', என்றார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.**

கல்வி என்பது எழுத்தறிவை மட்டும் கொடுக்காமல், மனிதனை சிந்திக்க வைக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும் என்பதை நன்கு உணர்ந்த மாண்புமிகு அம்மாவின் அரசு, 12–ஆம் வகுப்பு வரையில் புதிய பாடத் திட்டங்களை வெளியிட்டுள்ளது. இந்த நிதியாண்டில் பள்ளிக் கல்வித் துறைக்கென மிக அதிக அளவில் 28 ஆயிரத்து 957 கோடியே 62 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**''கல்லூரிகளில் 50 சதவீதத்தினருக்கும் மேல் கல்வி, பயில வகை செய்தல் எனது நோக்கமாகும்'' என்ற மாண்புமிகு அம்மா அவர்கள்,** தமிழ்நாட்டில் 65 கல்லூரிகளை துவக்கினார். மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த எங்கள் அரசும், 12 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை துவக்கியுள்ளதுடன், 5 பாலிடெக்னிக் கல்லூரிகளையும் துவக்கியுள்ளது. சமீபத்தில் ராமேஸ்வரத்தில் மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் மரியாதைக்குரிய திரு.அப்துல் கலாம் அவர்களின் பெயரில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாண்புமிகு அம்மாவின் அரசால் துவக்கப்பட்டுள்ளது.

மேலும், கடந்த மூன்று ஆண்டுகளில் விழுப்புரம், தருமபுரி, ராமநாதபுரம், சேலம், நாமக்கல் மற்றும் தேனி ஆகிய 6 மாவட்டங்களில் 6 சட்டக்கல்லூரிகள் துவக்கப்பட்டுள்ளன என்பதை நான் இங்கு பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

2019–2020ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீடுகளில் உயர்கல்வித் துறைக்காக 4 ஆயிரத்து 584 கோடியே 21 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போதைய காலகட்டத்தில் நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்துவதில் நமது மாணவர்கள் பின் தங்கி விடக்கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் மனதில் உதித்த திட்டம் தான் "**விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம்**". இந்தத் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு முழுவதும் 2011–2012 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் 6,813 கோடி ரூபாய் செலவில் 48 லட்சத்து 17 ஆயிரத்து 195 மடிக்கணினிகள் மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

- கல்விக்கென தனியாக கல்வித் தொலைக்காட்சி ஒன்றினை தமிழ்நாடு அரசு துவக்கி, அதனை வெற்றிகரமாக நடத்தி வருகிறது.
- அரசு பொறியியல் கல்லூரிகளில் பயிலும் 100 மாணாக்கர்களுக்கு 15 நாட்கள் அயல்நாட்டில் தொழில்நுட்ப பயிற்சி அளிக்கும் திட்டம் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- 1,350 கூடுதல் மருத்துவ பட்டப்படிப்பு இடங்கள் தமிழகத்தில் அதிகரிக்கப்பட்டுள்ளன.
- 1,213 மருத்துவ பட்ட மேற்படிப்பு இடங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

மேலும் 6 மாவட்ட தலைநகரங்களில் புதிய மருத்துவக் கல்லூரி திறக்க வேண்டுமென்று மத்திய அரசிடம் கோரிக்கை வைத்துள்ளோம். மத்திய அரசு அந்தக் கோரிக்கையினை தற்போது பரிசீலித்து வருகிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவிக்க விரும்புகின்றேன். ஏழை, எளிய மாணவர்கள் உயர் கல்வி படிக்கும் வகையில் கலை அறிவியல் கல்லூரிகள் மட்டுமல்லாது, சட்டக்கல்லூரிகளையும், தொழிற் கல்வி கற்பிக்கும் பொறியியல் கல்லூரி மற்றும் மருத்துவக் கல்லூரிகளையும் அதிக அளவில் திறந்து, எண்ணற்ற சாதனைகளை கல்வித் துறையில் மாண்புமிகு அம்மாவின் அரசு நிகழ்த்தி வருகிறது. இதன் காரணமாகத்தான், உயர் கல்வியில் சேரும் மாணவர்கள்

சதவீதம் **49 என உயர்ந்து, இந்தியாவிலேயே உயர் கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்கிறது** என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்கலைக்கழகங்கள் அறிவுலகின் கோயில்கள். பொருளாதாரத் தேவைகளை எதிர்கொள்ளக்கூடிய ஆராய்ச்சி மற்றும் திறன் வாய்ந்த தொழிலாளர்களை, பணியாளர்களை, இளம் விஞ்ஞானிகளை உருவாக்குவதால் தான், சமூக மாற்றம் மற்றும் வளர்ச்சிக்கான முக்கியமான அமைப்புகளாக பல்கலைக்கழகங்கள் கருதப்படுகின்றது. தற்போது தமிழ்நாடு அரசு, திறன் மேம்பாடு பயிற்சித் திட்டங்களின் மூலம் முக்கிய மனிதவளத் தேவையைப் பூர்த்தி செய்து வருவதால், நாட்டிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக உருவாகியுள்ளது.

“**கல்வி என்பது எழுத்தறிவை மட்டும் கொடுக்கக் கூடியதாக இருத்தல் கூடாது. அது மனிதனைச் சிந்திக்க வைக்கக் கூடியதாகவும், புரிந்து கொள்ள வைப்பதாகவும், பொறுமையை வளர்ப்பதாகவும் இருத்தல் வேண்டும்”, என்றார் முன்னாள் குடியரசுத்** தலைவர் மரியாதைக்குரிய டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள்.

ஒரு சமூகத்தின் வளர்ச்சி, பொருளாதார பரிணாம வளர்ச்சியுடன் மட்டும் நின்று விடுவதில்லை. உணவு, கல்வி, மருத்துவம், குடியிருப்பு, உடை ஆகியவற்றுக்கு வகைச் செய்யும் பொருள் வசதி மிக முக்கியமானது தான். அதே நேரம், வாழ்க்கையை கற்க, மனிதனின் அகம் மேன்மையடைய, இலக்கியம், சிந்தனைகள், நீதிக் கதைகள் ஆகியவை வழியே கிடைக்கும் விவேகம் ஆகியவற்றைப் பற்றி அறிந்து கொள்வதும் மிகவும் முக்கியமானது. இது இரண்டையும் ஒருங்கே கற்பவனே ஒரு முழு மனிதன் ஆவான்.

இங்கே கதை ஒன்றினை குறிப்பிட விரும்புகிறேன். ஊசி ஒன்று தன் ஒரு முனை கூர்மையாக இருப்பதில் பெருமையடைந்தது. ஆனால் தன் மறு

முனையில் துவாரம் இருப்பதை அவமானமாக நினைத்தது. ஒரு நாள் அதன் காதுமுனை உடைந்து போனது. காதறுந்த நிலையில் அந்த ஊசியை பயன்படுத்தியவர், அந்த ஊசியை தூக்கி எறிந்தார். அப்போதுதான் அந்த ஊசிக்கு தான் அவமானமாக நினைத்த மறுமுனையின் முக்கியத்துவம் புரிந்தது.

மாணாக்கர்கள் ஆகிய நீங்கள் கற்ற கல்வி, ஊசியின் கூர்மையை போன்றது. வெளி உலகில் நல்ல குடிமகனாக விளங்குவதற்கு பொது அறிவு, வாழ்க்கை கல்வி, ஞானம் அளிக்கக்கூடிய புத்தகங்களை படிப்பது ஆகியவை ஊசியின் காது போன்றது. தன்னுள் நூலை நுழைத்துக் கொள்ள காது இருப்பதால் தான் கூர்மையான ஊசி பயன்படுகின்றது. அதேபோன்று, மாணாக்கர்களாகிய நீங்கள் எவ்வளவுதான் படித்திருந்தாலும், உங்கள் கல்வி முழுமை பெற, நீங்கள் ஏட்டுக் கல்வியுடன், வாழ்க்கை கல்வியையும் சேர்ந்து கற்க வேண்டியது அவசியமாகும். பெற்றோர்களும் வாழ்க்கை கல்வி பெறுவதன் அவசியத்தை தங்கள் குழந்தைகளுக்கு எடுத்துரைக்க வேண்டுமென இத்தருணத்தில் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**“பத்து திங்கள் சுமந்தாளே**
**அவள் பெருமைப் படவேண்டும்**
**உன்னை பெற்றதனால் அவள்**
**மற்றவரால் போற்றப்பட வேண்டும்**
**கற்றவர் சபையில் உனக்காக**
**தனி இடமும் தரவேண்டும்”**

என்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் பாடல் வரிகளின்படி நீங்கள் ஒவ்வொருவரும் நம் நாடு போற்றும் மனிதர்களாக திகழவேண்டும் என்று உங்களை அன்புடன் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மரியாதைக்குரிய திரு.ஏ.சி.சண்முகம் அவர்கள் பேசுகின்றபொழுது, இந்தக் கல்லூரியினுடைய சிறப்பை எடுத்துச் சொன்னார். அவர் பெங்களூரில்

உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலே 1 லட்சம் நபர்களுக்கு இலவசமாக அறுவை சிகிச்சை செய்த காரணத்தினாலே 1 லட்சம் நபர்களை பிழைக்க வைத்த பெருமை மரியாதைக்குரிய திரு.ஏ.சி.சண்முகம் அவர்களைச் சாரும். பணம் இருந்தால் போதாது, மனம் இருக்க வேண்டும். அந்த மனமும், ஈகையும் கொண்டவர் மரியாதைக்குரிய திரு.ஏ.சி.சண்முகம் அவர்கள், இந்த நேரத்தில் அவர்களை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, அவர் அண்மையிலே வேலூர் நாடாளுமன்றத் தொகுதியிலே போட்டியிடுகின்றபோது, நான் அவரோடு தேர்தல் பிரச்சாரத்திலே ஈடுபட்டிருந்தேன். அப்போது தேர்தல் பிரச்சாரத்திலே குறிப்பிட்டார், இந்த வேலூர் நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட 6 சட்டமன்றத் தொகுதிகளிலும், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் 100 நபர்களுக்கு என்னுடைய கல்லூரியிலே இலவசமாக படிக்க வைப்பேன், அனைத்து செலவுகளையும் நானே ஏற்றுக்கொள்வேன் என்று சொன்னார். 6 சட்டமன்றத் தொகுதிகள் என்கின்றபொழுது 600 நபர்களை இலவசமாக படிக்க வைப்பேன் என்று சொன்னால், எந்த அளவுக்கு பெருமைக்குரியது என்பதை நாம் பார்க்க வேண்டும். அதற்காக அவரை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வேலூர் நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்டவர்கள் யாரேனும் நோய்வாய்ப்பட்டால் பெங்களூரிலுள்ள மருத்துவமனையில் நான் இலவசமாக அந்த சிகிச்சைக்குரிய முழு செலவையும் அளிப்பேன் என்ற உறுதியையும் கொடுத்தார். ஆகவே, ஒருவர் அரசியலிலே இருப்பது பெரிதல்ல, இருக்கின்ற காலத்திலே என்ன உதவி செய்தார் என்பது தான் பெரிது. அப்படி உதவி செய்கின்ற மனம் மரியாதைக்குரிய திரு.ஏ.சி.சண்முகம் அவர்களுக்கு இருக்கின்றது, அவர் பாராட்டுக்குரியவர்.

ஒரு சாதாரண குடும்பத்திலே பிறந்து இந்த அளவிற்கு வளர்ந்திருக்கிறார் என்று சொன்னால், அவரது உழைப்பு எந்த அளவிற்கு

இருக்கின்றது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். “முயற்சி திருவினையாக்கும்” என்று சொல்வார்கள். முயற்சி செய்தால் எதையும் சாதிக்க முடியும். இதற்கு உதாரணமாக இருப்பவர் மரியாதைக்குரிய திரு.ஏ.சி.சண்முகம் அவர்கள். அவர் முயற்சி செய்த காரணத்தினாலே இன்றைக்கு 35,000 மாணவர்கள் கல்வி கற்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தந்திருக்கிறார். ஏறத்தாழ 7,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறார். முயற்சி, உழைப்பு ஆகிய இரண்டும் இருந்தால், அவரைப் போல் நீங்களும் வளரலாம் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மாணவர்கள் ராணுவத்திற்கு உதவியாக பல்வேறு சாதனங்களை தயாரித்து கொடுத்து, ராணுவத்தில் பயன்படுத்துகின்ற நிலையை ஏற்படுத்தி இருக்கிறார்கள் என்பதை எண்ணி இந்த பல்கலைக்கழகத்தை பாராட்டுகிறேன். உங்கள் ஆராய்ச்சி தொடர வேண்டும், இந்த நாட்டிற்கு உங்களது பங்களிப்பு இருக்க வேண்டும், மென்மேலும் வெற்றியை குவிக்க வேண்டும். இந்த நாடு வளர, உங்களுடைய இல்லம் சிறக்க வாழ்த்தி, பட்டம் பெற்ற அனைவரையும் வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**